**JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU**

**CC No.309/2014**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*********

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 1 |
| Name | : Thiru.Muhamad bilal |
| Father's Name | : ஆஜா மொய்தீன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.08.2021.

**முதல் விசாரணை -**

நான் கடப்பாக்கத்தில் வசித்து வருகிறேன். நான் துணி வியாபாரம் செய்து வருகிறேன். நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கும் எ6 சம்சூதீன் எனது தாய்மாமா ஆவார். இந்த வழக்கின் புகார்தாரர் நூர்ஜஹான் எனது தாயார் ஆவார். இவ்வழக்கின் எ2 எதிரி மற்றும் எ3 எனது சொந்த அண்ணன்கள் ஆவார்கள். எனது அக்கா பெயர் நஜிமுனிஷா ஆகும். இந்த வழக்கின் எ4 எதிரி நஜிமுனிஷா எனது சகோதரி அல்ல. எ4 எதிரி நஜிமுனிஷா எ4 எதிரி சம்சூதீன் அவர்களது மனைவி ஆவார். என்னுடைய அக்காவிற்கு பதிலாக எ4 எதிரிதான் பத்திரத்தில் கையெழுத்து போட்டார். எ5 எதிரி முகமது ஆரீப் எனக்குப் பதிலாக பத்திரத்தில் கையெழுத்து போட்டவர் ஆவார். அவரும் எனக்கு உறவுக்காரர் ஆவார். இந்த வழக்கின் எ7 ரமேஷ் பத்திரத்தில் சாட்சிக் கையொப்பம் போட்டவர் ஆவார். இந்த வழக்கின் சொத்தினை எனது தகப்பனார் கடந்த 1987 ஆம் ஆண்டு வாங்கினார். இந்த சொத்தானது செய்யூர் பக்கத்தில் உள்ள ஆகனாம்பட்டில் உள்ளது. ஆகனாம்பட்டில் சர்வே நம்பர் 83 ல் 7 ஏக்கர் 25 சென்ட் நிலத்தை எனது தகப்பனார் வாங்கினார். சான்றிட்ட நகல் எண் 1495|1987 என் அப்பா வாங்கிய சொத்தின் பத்திரம் ஆகும். அது அசாஆ 1 ஆக வழக்கில் குறியீடு செய்யப்படுகின்றது. நான் 1986 ல் பிறந்தேன். இந்த சொத்து வாங்கும் பொழுது எனக்கு 1 வயது இருக்கும். எனது தகப்பனார் 1989 ஆம் வருடம் காலமானார். என்னுடன் பிறந்தவர்கன் நஜிமுனிஷா மற்றும் எ2 முகமது ரபீக் மற்றும் எ3 சாகுல் அமீது ஆவார்கள். நான் மைனராக இருக்கும்போதே மேற்சொன்ன சொத்தில் 3 ஏக்கர் 10 சென்ட்டை என்னுடைய தாயார் மற்றும் சகோதரர்கள் விற்று விட்டார்கள். மீதம் 4 ஏக்கர் இருந்தது. கடந்த 2006 ல் நான் மேஜரான பிறகு எனக்கு தெரியாமலேயே எனது கையெழுத்தை வேறொரு எ5 எதிரி முகமது ஆரிப் என்பவரைக் கொண்டு கிரையம் செய்து விட்டார்கள்.

அதேபோல் என்னுடைய அக்காவின் கையெழுத்தை எ4 நஜிமுனிஷா கையெழுத்து போட்டு கிரையம் செய்து விட்டார்கள். என்னைப்போல் கையெழுத்து போட்ட எ5 முகமது ஆரீப் மற்றும் எ4 எதிரி நஜிமுனிஷா இருவரையும் என்னால் அடையாளம் காட்ட முடியும்.

**(வழக்கின் ஆவணங்களைக் குறியீடு செய்ய வேண்டி முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகின்றது)**

**குறுக்கு விசாரணை -** இல்லை.
Sd. xxxxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd. xxxxxx
Judicial Magistrate No.II
Chengalpattu.